**பருப்புக்கள் மற்றும் தானியங்கள் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி அதிகாரசபை - 2017**

பருப்புக்கள் மற்றும் தானியங்கள் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கலைத்தல் நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. கலைத்தல் செயற்பாடுகளுக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் பின்வரும் பந்திகளில் காண்பிக்கப்பட்டுள்ளன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

கலைப்பு நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளை செயற்படுத்துவது கணக்காய்வில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

கலைத்தல் நிலைமையில் காணப்படும் பருப்புக்கள் மற்றும் தானியங்கள் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கலைத்தல் செயற்பாடுகள் தாமதித்தல்

2013 ஏப்ரல் 04 ஆந் திகதிய 13/0361/536/005 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தின் மூலம் கலைப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன் கலைத்தல் நடவடிக்கைகள் 2014 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கலைத்தல் நடவடிக்கைகள் 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் பற்றாக்குறை ரூபா 20,384 ஆக இருந்ததுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 374,940 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 354,556 ஆன அதிகரிப்பொன்றைக் காண்பித்தது.

(ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 21 3(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஏதேனும் உரித்து கோரலுக்கான கொடுப்பனவிற்காக நிதியத்தை பயன்படுத்தியதன் பின்னர் சேமிக்கப்படும் ஏதேனும் சேமிப்பொன்று திறைசேரி செயலாளருக்கு கையளிக்க வேண்டிய போதும் நடைமுறைக் கணக்கில் ரூபா 1,578,850 தொகை 2017 சனவரி 1 ஆந் திகதி முதல் திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 552 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2019 செப்தம்பர் 04 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.